| Headline | Award recipient touched by King's kind gesture | | |
| --- | --- | --- | --- |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 11 Sep 2019 | Color | Full Color |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 4 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 207 cm² |
| Journalist | NULL | AdValue | RM 1,355 |
| Frequency | Daily | PR Value | RM 4,065 |



# சிம்மாசனத்திலிருந்து இறங்கி வந்து விருதளித்த மன்னரின் மாண்பு

கோலாலம்பூர், செப்.11–

மாட்சிமைத் தங்கிய பேரரசரின் பிறந்ததினத்தை முன்னிட்டு அரண்மனையில் வழங்கப்பட்ட விருதளிப்பு நிகழ்ச்சியின்போது சிம்மாசனத்திலிருந்து கீழே இறங்கி வந்து தமக்கு விருது வழங்கிய மாட்சிமைத் தங்கிய பேரரசர் அல் சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல் முஸ்தாப்பா பில்லா ஷாவின் மேன்மை தம்மை நெக்குருகச் செய்துவிட்டதாக நெகிழுகிறார் மலேசிய வனத்துறை ஆய்வுக் கழகத் தலைமை இயக்குநர் டத்தோ டாக்டர் அப்துல் லத்திப் முகமட்.

மாமன்னரின் அந்தப் பரிவும் தயாளமும் தம்மை உள்ளம் கசிய வைத்துவிட்டதாக அவர் விவரித்தார். கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் பட்ட காயத்தின் காரணமாக கைத்தடியைப் பயன்படுத்தி நடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதால் விருதளிப்பு விழாவுக்கும் அந்தக் கைத்தடியுடனேயே அப்துல் லத்திப் வந்திருந்தார்.



சிம்மாசனம் அமைக்கப்பட்டிருந்த பீடத்திற்குப் படியேறிச் செல்ல அவர் வரிசையில் காத்திருந்தார். ஆனால் அவரது முறை வந்தபோது அரியணையில் அமர்ந்திருந்த மாமன்னர், அவரை நோக்கி மேலே வர வேண்டாம் என்று தடுத்து சைகை செய்துவிட்டு தாமே படிகளில் இறங்கி வந்து அவருக்கு விருதளித்தது அனைவரையும் வியப்பின் உச்சத்திற்கே கொண்டு சென்றது.

கைத்தடியை ஊன்றி மேலே வருவது சிரமம் என்பதை மாமன்னர் உணர்ந்து தமக்காகப் படிகளில் இறங்கி வந்து விருதை அணிவித்த அந்த அதிர்ச்சியில் இருந்து மீள தமக்குச் சில நிமிடங்கள் பிடித்ததாக அப்துல் லத்திப் கூறுகிறார். - பெர்னாமா

Powered by: iSENTIA